ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2348/47 - 2023 සැප්තැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2023.09.08

*2348/47 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### நாட்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கை மற்றும் மூலோபாய கட்டமைப்பு (2023 - 2033)

*நாட்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கை மற்றும் மூலோபாய கட்டமைப்பு*

*2023.06.05 ஆந் திகதி அன்று அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள்பட்ட தொற்று நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தற்போதைய தேசிய கொள்கை மற்றும் மூலோபாயக் கட்டமைப்பு (2023 - 2033), நாள்பட்ட தொற்று நோய்கள் காரணமாக ஏற்படும் நோய்வாய்ப்படும் தன்மை, இயலாமை ஏற்படுதல் மற்றும் முன்கூட்டிய இறப்பு என்பவற்றை குறைப்பதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகின்றது. மேலும் ஆரம்பகால நோய் கண்டறிதல் சிகிச்சையளித்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சை என்பவற்றுக்கான சேவைப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பொதுவான ஆபத்துக் காரணிகளால் மக்களிற்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதன் மூலம் நாள்பட்ட தொற்றா நோய்களின் சுமையைக் குறைப்பதற்கும் சுகாதார அமைப்பின் பிரதிபலிப்பினை வலுப்படுத்துவதற்கான வழிவகைகளை இந்த கொள்கை பரிந்துரைக்கின்றது.*

*நாடு வேகமான தொற்று நோயியல் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளதால், தொற்று நோய்களிலிருந்து தொற்று நோய்களின் ஆதிக்கத்திற்கு மாற்றமடைந்ததனை குறிப்பிட்டு 2010.07.21 ஆம் திகதி அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கபபட்ட நாள்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான முன்னைய தேசிய கொள்கை மற்றும் மூலோபாயக் கட்டமைப்பு 2010-2020, தேவையான சேவை விரிவாக்கத்தை எளிதாக்கும் 2023 - 2033 உடன் தொடர்புடைய தற்போதைய கொள்கையினால் பதிலீடு செய்யப்படுகின்றது.*

**எஸ். ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த,**
*செயலாளர்,*
*சுகாதார அமைச்சு.*

*சுகாதார அமைச்சு,*
*“சுவசிரிபாய”,*
*385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை,*
*கொழும்பு 10.*


1A - PG 6479 — 256 (2023/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


# இலங்கையில் நாட்பட்ட தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான தேசிய கொள்கையும் மூலோபாயக் கட்டமைப்பும் (2023-2033)

**சுகாதார அமைச்சு**
இலங்கை

## அறிமுகம்

இலங்கை தற்காலத்தில் எதிர்கொள்ளும் சவால்களான தொற்று நோயியல், சனத்தொகை சார், சமூக பொருளாதார மற்றும் சுற்றாடல் மாற்றங்கள் ஆகியவை பொதுச் சுகாதாரம் சம்பந்தமான நிலப்பரப்பு வேறுபாடுகளுக்குக் காரணகர்த்தாவாக அமைகின்றன. தற்காலத்தில் எட்டில் ஓர் இலங்கையர்கள் 60 வது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்களாக உள்ளதோடு 2041 ஆம் ஆண்டளவில் இவ்விகிதாசாரம் இருமடங்காகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வயது அதிகரிக்கும் போது தொற்றா நோய்களினால் பாதிக்கப்படும் தன்மை அதிகரித்துச் செல்கிறது. விரையான நகரமயமாக்கம், உலக மயமாக்கல், வர்த்தக தாராள மயமாக்கல் மற்றும் சனத்தொகை இடமாற்றங்கள் போன்றவை மக்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையை பின்பற்றுவதற்கு பல வழிகளில் பங்களித்துள்ளன. அத்துடன், தற்காலத்தில் காணப்படுகின்ற சூழலியல் மாற்றங்கள் நாட்பட்ட தொற்றா நோய்கள் தொடர்பான ஆபத்தானது சகல மக்கள் குழுக்களிலும் அதிகரித்துக் காணப்படக் காரணமாகின்றன.


2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இறுதியான மதிப்பீட்டின்படி, இலங்கையில் தொற்றா நோய்கள் ஆனவை ஏறத்தாழ 83% ஆன மொத்த இறப்புகளுக்குக் காரணமாக அமைவதுடன் நான்கு பிரதான நாட்பட்ட தொற்றா நோய்களின் விகிதாசார இறப்பு விகிதமானது, இதய நோய்கள் - 34%, புற்று நோய்கள் - 14% சலரோகம் - 9%, நாட்பட்ட சுவாச நோய்கள் 8% ஆக அமைகின்றன. ஏனைய தொற்றா நோய்கள் 18% ஆன வருடாந்த இறப்ப வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன் 30 - 70 வயதானவர்களிடையே நான்கு பிரதான நாட்பட்ட தொற்றா நோய்களாலும் ஏற்படும் வயது முதிரா இறப்பின் ஆபத்தானது 17% ஆகக் கணிக்கப்பட்டுள்ளது. படம் 1 இல் பிரதிபலிப்பது போல், திட்டமிடப்பட்ட நேரியல் போக்குகளின் அடிப்படையில் அகால மரணங்களைக் குறைப்பதற்கான உலகளாவிய இலக்கை அடைவதற்கான பாதையில் இலங்கை இல்லை இந்த இலக்குகளை அடைவதற்கு வலுப்படுத்தப்பட்ட மற்றும் துரிதப்படுத்தப்பட்ட நடவடிக்கையின் அவசியத்தை கருத்தில் கொண்டு, 2010 தேசிய கொள்கை மற்றும் நாள்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான மூலோபாயக் கட்டமைப்பு திருத்தப்பட்டது.




| | தரவுஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மொத்த தொற்றாத நோய் இறப்புகள் | 2016 | 62600 | 56100 | 118700 |
| 20-70 வயதினரிடையே அகால மரணம் ஏற்படும் அபாயம் (%) | 2016 | 22 | 13 | 17 |


படம் 1 - இலங்கையில் தொற்றா நோய்களால் ஏற்படும் வயது முதிரா இறப்பிற்குரிய ஆபத்து (ஆதாரம் தொற்றா நோய்கள் நாடுகளின் சுயவிவரங்கள், உலக சுகாதார ஸ்தாபனம், 2018).

படம் 2 - இல் காட்டப்பட்டுள்ளதின்படி 2019 ஆம் ஆண்டில் இறப்பிற்குரிய பிரதான காரணியாக இதயநோய் அமைவதுடன், இரண்டாவதாக புற்றுநோய்களும், ஏழாவதாக மூளைக்குரிய இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பு காரணமாக ஏற்படும் நோய்களும் அமைகின்றன.





*படம் 2 - 2019 ஆம் ஆண்டின் சனத்தொகை 100,000ற்கு வைத்தியசாலை இறப்பிற்குரிய முதல் பத்து காரணிகள் (ஆதாரம் - Annual Health Bulletin 2019)*

மேலும் தொற்றா நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் போக்கு அதிகரித்துச் செல்வதை படம் - 03 காட்டுகிறது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரைப் பார்க்கும் போது முதல்நிலைக் காரணியாக இதய நோய் அமைவதைக் காணலாம்.



நாள்பட்ட தொற்றாநோய்களால் அரச மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் போக்கு, 2014-2019



நாள்பட்ட தொற்றாநோய்களால் அரச மருத்துவமனைகளில் ஏற்படும் இறப்புகளின் போக்கு, 2014-2019

*படம் 03: - இலங்கையில் 2014 இலிருந்து 2019 வரையான காலத்தில் தொற்றா நோய்கள் காரணமான வைத்தியசாலை அனுமதியின் போக்கு (ஆதாரம்: Annual Health Bulletin 2019)*

தொற்றா நோய்களின் பரவல் மற்றும் ஆபத்துக் காரணிகளைக் கண்டறிவதற்காக, 18 - 69 வயதினர் 5188 பேரிடையே 2015 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட STEPS ஆய்வின்படி 40 - 69 வயது இலங்கையர்களில் 9.1% ஆனோர் அடுத்து வரும் 10 வருடங்களில் இதய நோயால் பாதிக்கப்படும் ஆபத்தானது 30 வீதம் அல்லது அதற்கு மேற்பட்டளவு காணப்படுவோர் அல்லது இதய நோய் தாக்கமடைபவர்கள் ஆவர். இந்த ஆய்வின் படி நான்கில் ஒரு இலங்கையர் உயர் குருதியமுக்கத்துடன் அல்லது

அதற்குரிய மருந்துகளை உட்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட நான்கில் ஒருவர் உயர் மொத்த கொலஸ்ரோல் (>190 mg/dl) பாதிப்புக்குள்ளானவராகவோ அல்லது அதற்குரிய மருந்துகளை உட்கொள்பவராகவோ காணப்படுகின்றனர். மேலும், 7.4% ஆனோர் உயர் குருதி சீனியின் அளவு கொண்டவராகவோ அல்லது அதற்குரிய மருந்துகளை உட்கொள்பவராகவோ காணப்படுகின்றனர்.

தொற்றா நோய்களுக்குரிய ஆபத்துக் காரணிகளை மாற்றத் தக்க காரணிகள், மாற்றமுடியாத காரணிகள் என வகைப்படுத்தலாம். மாற்ற முடியாத காரணிகளுள் வயது, பால், இனம், குடும்ப வரலாறு போன்றன அமைவதுடன், மாற்றத்தக்க காரணிகளுள் புகைத்தல், மதுபான பாவனை, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், உடல் இயக்கமின்மை மற்றும் மன அழுத்தங்கள் போன்றன பிரதான காரணிகளாக அமைகின்றன. இவ் ஆபத்துக் காரணிகள் ஆனவை நான்கு பிரதான நாட்பட்ட தொற்றாநோய்களுக்குரிய இடைநிலை ஆபத்துக் காரணிகளான உடற்றொழியியல்/உடலில் ஏற்படும் தொழிற்பாட்டு மாற்றங்களான அதிகரித்த குருதியமுக்கம், அதிகரித்த உடற்பருமன், உயர்நிலை குருதி சீனியின் அளவு, உயர் கொலஸ்ரோல் போன்றவற்றிற்கு வழிவகுக்கின்றன. மாற்றத்தக்க ஆபத்துக் காரணிகளைக் கொண்டிருக்கும்போது, ஆபத்தான நடத்தைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். அத்துடன் "வளி மாசடைதல்" ஆனது சூழலியல் ஆபத்துக் காரணியாக நாட்பட்ட சுவாச நோய்கள், இதய நோய்கள், பாரிசவாதம், புற்றுநோய் மற்றும் ஞாபக மறதி நோய்களை உருவாக்குவதில் பங்குவகிக்கின்றது.

STEPS ஆய்வின்படி, இலங்கை ஆண்களில் ஏறத்தாழ அரைப்பங்கினர் புகையிலை பாவனையாளர்களாகவும் அவர்களுள் 29% ஆனோர் புகையிலை புகைப்பவர்களாகவும் காணப்பட்டனர். ஆண்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடந்த 30 நாட்களில் மது அருந்தியவர்களாக காணப்பட்டனர். பெரும்பான்மையான (73%) வளர்ந்தவர்கள் போதுமானளவு பழவகைகள் மற்றும் காய்கறிகளை உட்கொள்ளாதவர்களாகவும், ஏறத்தாழ 26% ஆனோர் உயர்ந்த உப்பு வீதத்தைக் கொண்ட உடன் உணவுகளை அடிக்கடி உட்கொள்பவர்களாகவும் காணப்பட்டனர். மூன்றில் ஒரு பெண்கள் மற்றும் நான்கில் ஒரு ஆண்கள் உடற் திணிவுச்சுட்டி 25 அல்லது அதற்கு மேற்பட்டளவு உடையவர்களாக காணப்பட்டனர் அதோடு மூன்றில் ஒரு வளர்ந்தவர்கள் குறைந்த உடற்பயிற்சி நடத்தை உடையவர்களாக காணப்பட்டனர். தொற்றா நோய்களுக்குரிய மனித நடத்தை தொடர்பான ஆபத்துக் காரணிகள் சிறுவயதிலிருந்தே உருவாக்கப்படுகின்றன. உலகளாவிய புள்ளி அடிப்படையிலான மாணவர்களின் சுகாதார ஆய்வின்படி (2016) 13 - 17 வயது மாணவர்களில் 5.5% ஆன ஆண் மாணவர்கள் மதுபாவனையுடையவர்களாகவும் 15.6% ஆன ஆண் மாணவர்கள் புகையிலை சார் உற்பத்திகளைப் பாவிப்பவர்களாகவும், 26.2% ஆன மாணவர்கள் காபனேற்றப்பட்ட மென்பானங்களை ஒவ்வொருநாளும் அருந்துபவர்களாகவும் மற்றும் 37.3% ஆன மாணவர்கள் 3 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேல் ஒரே இடத்திலேயே இருப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இநதப் பின்னணியை நோக்கும் போது எதிர்காலத்தில் இலங்கையர்களிடம் தொற்றா நோயின் சுமையானது அதிகரித்துச் செல்லும் என்பதையும் குறைந்த வயதிலேயே தொற்றா நோய்களின் தாக்கம் உருவாகும் என்பதையும் எதிர்பார்க்கலாம்.

பிரதான நான்கு நோய்களுக்கு (இருதய நோய், புற்றுநோய், நீதிழிவு நோய் மற்றும் நாட்பட்ட நுரையீரல் நோய்) மேலதிகமாக கண் நோய்கள், கேட்டல் குறைபாடுகள், நாட்பட்ட ஈரல் நோய்கள், நாட்பட்ட நரம்பியல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோய்கள் போன்றவையும் கருத்திற்கொள்ளப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு புதிய கொள்கையானது பரந்த அளவிலான நோய்களுக்கு வழிகாட்டும்.

பார்வையின்மையும் நடுத்தர பாதிப்பு முதல் கடுமையான பாதிப்புள்ள பார்வைக்குறைபாடுகளும் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் தென்கிழக்காசிய நாடுகளிடையே அதிகமாக காணப்படுகின்றன. கண்புரை, சரிசெய்யப்படாத ஒளிவிலகல் பிழைகள் மற்றும் நீரிழிவால் ஏற்பட்ட விழித்திரைப் பாதிப்புகள் ஆகியவை பார்வையின்மைக்கு முக்கிய காரணங்கள் ஆகும். மேற்கூறியவற்றின் பயனுள்ள சிகிச்சை செயலெல்லையை மேம்படுத்துவதற்கும் கண் அழுத்த நோய் (glaucoma) போன்ற பார்வையின்மைக்கான பிற வளர்ந்து வரும் காரணங்களை மேம்படுத்துவதற்கும் அதன் கண்காணிப்பு பொறிமுறையை மேம்படுத்துவதற்கும் அவசர கவனம் தேவைப்படுகிறது. கேட்டல் திறன் இழப்பு என்பது பலவிதமான காரணங்களால் எற்படும் பரவலான சுகாதார நிலையாகும், இது வாழ்நாள் முழுவதும் தனிநபர்களை பாதிக்கிறது கேட்டல் திறன் குறைபாட்டின் பரவலானது மக்கள்தொகைப் போக்குகள் மற்றும் தொடர்ச்சியான மற்றும் வளர்ந்து வரும் ஆபத்து காரணிகளால் உந்தப்பட்டு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9% பேர் கேட்டல் திறன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கிடைக்கக்கூடிய தரவு காட்டுகிறது. பயனுள்ள பொது சுகாதார உத்திகள் மற்றும் மருத்துவத் தலையீடுகள் ஆனவை பல சமயங்களில், எல்லா வயதினருக்கும் காது கேளாமை ஏற்படுவதையோ அல்லது அதன் முன்னேற்றத்தையோ தடுக்கலாம், உதாரணமாக வயதானவர்களுக்கு கேட்டல் திறன் பரிசோனை செய்வது செலவு குறைந்த உத்தி ஆகும்.

மேலும் ஈரல் நோய்களிலும் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியமாகிறது. கொழுப்பு ஈரல் நோயும் (மதுபாவனையுள்ள அல்லது மதுபாவனையற்ற) ஒரு பிரதான தொற்றா நோயாக விளங்குவதுடன் அவசர அவதானிப்பு தேவையாகின்றது. இக் கொழும்பு ஈரல் நோயானது ஏனைய தொற்றா நோய்களான நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், இதய நோய், ஈரல் புற்றுநோயுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருப்பது சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஏற்படும் நாட்பட்ட ஈரல் நோய்களுக்குரிய வகைகளாக மதுபாவனையால் ஏற்படும் ஈரல் நோய்களும், மதுபாவனை தொடர்பில்லாத கொழுப்பு ஈரல் நோய்களும் அமைகின்றன. இத்துடன் வயது முதிர்ந்தவர்களின் விகிதாசாரம் அதிகரித்துச் செல்வதும். உடற் பருமன் அதிகரிப்பு, உடல் இயக்கமின்மை, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், மற்றும் நீரிழிவு நோய் போன்றவற்றின் அதிகரிப்பாலும் ஈரல் சம்மந்தப்பட்ட தொற்றா நோய்களின் பரவல் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொள்கைக் குறிக்கோளை அடைவதற்கு பின்வரும் பிரதான மூலோபாயப் பகுதிகள் கண்டறியப்பட்டும் முன்னிலைப்படுத்தப்பட்டும் உள்ளன.

1. தொற்றா நோய்களிற்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான கொள்கை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை வலுப்படுத்தல்

2. தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களில் தொற்றா நோய்களிற்கான சுமையைக் கையாள்வதற்கான சிறந்த - கண்காணிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் வழிமுறைகளை வலுப்படுத்துதல்

3. ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை மேம்படுத்துவதற்கு சமூகத்தை வலுப்படுத்துதல்

4. பல துறை ஒத்தழைப்பு மற்றம் கூட்டாண்மையை வலுப்படுத்துதல்

5. நிலையான, மக்களை மையப்படுத்திய, தரப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த தொற்றா நோய்களிற்கான பராமரிப்பை வழங்க சுகாதார அமைப்பை மறுசீரமைத்து வலுப்படுத்துதல்

6. கிடைக்கக்கூடிய மனித வளங்களை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்ய சுகாதார பணியாளர்களை வலுப்படுத்துதல் மற்றும் திறனை மேம்படுத்துதல்.

7. தொற்றா நோய்களிற்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை எளிதாக்குவதற்கு சமமான மற்றும் நிலையான நிதியுதவியை உறுதி செய்தல்.

8. சிறந்த நிகழ்ச்சி மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர் விளைவுகளை நோக்கி தகவல் மேலாண்மை அமைப்புகளை வலுப்படுத்துதல்.

9. ஆதாரம் சார்ந்த நடைமுறைக்கான ஆராய்ச்சியை ஊக்குவித்தல்

**முக்கிய நடவடிக்கைகள்**

**மூலோபாயம் - 01 தொற்றா நோய்களிற்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான கொள்கை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்**

1.1 ஆதார அடிப்படையிலான தொற்றா நோய்கள் தொடர்பான உத்திகள் மற்றும் தேசியக் கொள்கைகள், திட்டமிடல் - நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் திட்டங்களின் தலையீடுகளை முக்கியத்துவப்படுத்தவும் மற்றும் சுகாதாரத்தின் சமூக - நிர்ணயங்களை முன்னுரிமைக் கொள்கைப் பகுதியாகக் கையாளவும் அரசியல் தலைமைக்கு பரிந்துரை செய்தல்.

1.2 தொற்றா நோய்களுக்கான முக்கிய ஆபத்து காரணிகளின் (புகையிலை, மதுபானம், ஆரோக்கியமற்ற உணவு, உடல் செயற்பாடின்மை, வளி மாசடைதல்) தாக்கத்தை குறைக்க கொள்கை மற்றும் சட்டச் சூழலை வலுப்படுத்துதல்.

1.3 பார்வைக் குறைபாடுகள், நாள்பட்ட ஈரல் நோய் மற்றும் செவித்திறன் குறைபாடுகள், நோய் சுமை அடிப்படையிலான நாள்பட்ட ஈரல் நோய் போன்ற பிற வளர்ந்து வரும் நாள்பட்ட தொற்றா நோய்களைத் தீர்க்க ஆதார அடிப்படையிலான செலவு குறைந்த தலையீடுகள் மற்றும் வளங்களை கருத்திற்கொண்டு தேவையான முன்முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

மூலோபாயம் - 02 தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களில் தொற்றா நோய்களிற்கான சுமையைக் கையாள்வதற்கான சிறந்த - கண்காணிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

2.1 முடிவுகள் கட்டமைப்பு மற்றும் செயல்திட்டங்கள் மூலம் சுகாதாரத் துறைக்குள் கொள்கையின் அமலாக்கத்தை தொடர்ந்து கண்காணித்து, சரியான நேரத்தில் தீர்வு நடவடிக்கைகளை எடுத்தல்.

2.2 தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பல துறைகளின் செயல்பாடுகளின் ஒழுங்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மூலம் சுகாதாரம் சாரா பங்குதாரர்களின் பொறுப்புணர்வை வலுப்படுத்துதல்.

2.3 மூலோபாய திசை, வள ஒதுக்கீடு மற்றும் செயல்திறனின் அங்கீகாரம் ஆகியவற்றில் சரியான நேரத்தில் முடிவெடுப்பதற்காக கிளஸ்டர் மட்டங்கள் உட்பட தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களில் செயல்திறனை அவ்வப்போது மதிப்பீடு செய்தல்.

2.4 தனியார் துறை மற்றும் சுதேச மருத்துவத் துறையில் ஒரே மதிரியான சேவையை வழங்குவதற்காக தொற்றா நோய்களிற்கான சேவைப் பொதியின் ஒழுங்குமுறை மற்றும் சேவைப் பொறுப்புணர்வை வலுப்படுத்துதல்.

**மூலோபாயம் - 03 ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கு சமூகத்தை வலுப்படுத்துதல்**

3.1 வாழ்க்கை சக்கரத்தில் தற்போதுள்ள சேவைப் பொதிகளில் மக்கள்தொகையின் சமூக - கலாசார வேறுபாடுகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலாக தொற்றா நோய்கள் தடுப்புத் தலையீடுகளை ஒருங்கிணைத்தல்.

3.2 அடையாளம் காணப்பட்ட அமைப்புகளில் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சூழல்கள் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தல்.

3.3 தொற்றா நோய்களிற்கான ஆபத்தை குறைப்பதற்கான திறன் பெற்ற சமூகத்தில் மாற்றும் முகவர்களாக செயல்படும் திறன் கொண்ட சுகாதார பணியாளர்களை உருவாக்குதல்.

3.4 கொள்கை இலக்குகளை அடைவதற்காக ஒரு தகவல் தொடர்பு மூலோபாயத்தை பின்பற்றுதல்.

3.5 சமூக வலுவூட்டல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதில் சிவில் - சமூக அமைப்புகள் மற்றும் சமூகத் தலைவர்களின் பங்கை மேம்படுத்துதல்.

**மூலோபாயம் - 04 பல துறை ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை வலுப்படுத்துதல்**

4.1 சுகாதார மற்றும் சுகாதாரம் அல்லாத துறைகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள், தனியார் துறை, கல்வித்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் தேசிய பங்களிப்பிற்கான ஒருங்கிணைந்த பல் துறை ஈடுபாட்டை வலுப்படுத்துதல்.

4.2 தொற்றா நோய்களிற்கான தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தலில் வள ஒதுக்கீட்டிற்காக பிற பங்குதாரர்களிடம் பரிந்து பேசுதல்.

4.3. தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களில் தொற்றா நோய்களிற்கான ஒருங்கிணைப்பு அமைப்புகளின் மேற்பார்வை மற்றும் ஈடுபாட்டை வலுப்படுத்துதல் (தொற்றா நோய்கள் சபை, தேசிய தொற்றா நோய்கள் வழிகாட்டும் குழு மற்றும் மாவட்ட தொற்றா நோய்களிற்கான வழிகாட்டும் குழுக்கள்)

**மூலோபாயம் - 05 நிலையான , மக்களை மையப்படுத்திய, தரப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த தொற்றா நோய்களிற்கான பராமரிப்பை வழங்க சுகாதார அமைப்பை மறுசீரமைத்து வலுப்படுத்துதல்**

5.1 ஒருங்கிணைந்த, மக்களை மையமாகக் கொண்ட அத்தியாவசிய தொற்றா நோய்களிற்கான சேவைகளை செயல்படுத்த ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல்

5.2 அத்தியாவசிய மருந்துகள், பரிசோதனைகள், தொழில்நுட்பங்கள் மற்றும் மனித வளங்கள் போன்ற கிடைக்கக்கூடிய வளங்களை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்ய, பராமரிப்பு சேவைகள் தமக்குள்ள பகிரப்படுவதற்காக உருவாக்கப்பட்ட குழுக்கள் (shared care cluster) மூலம் தொற்றா நோய்களிற்கான சேவைகளை வழங்குவதை வலுப்படுத்துதல் மற்றும் பரிந்துரை மற்றும் பின் - பரிந்துரை முறையை சீரமைத்தல்

5.3 அத்தியாவசிய சேவைகள் தொகுப்பில் உள்ள தொற்றா நோய்கள் தொடர்பான சேவைகளுக்கு சமமான பாரபட்சமற்ற அணுகலை உறுதிசெய்து, தேவையான அத்தியாவசிய மருந்துகள், பரிசோதனைகள், தொழில்நுட்பங்கள் மற்றும் பிற ஆதாரங்களை தொடர்ந்து பதிப்பாய்வு செய்து கிடைக்கச் செய்தல்

5.4 அனைத்து நிலைகளிலும் தொற்றா நோய்கள் தொடர்பான நோயாளர்களின் முகாமைத்துவத்தில் தரங்களை மேம்படுத்துதல், அதே நேரத்தில் மருத்துவத் தரநிலைகள், நோயாளியின் பாதுகாப்பு மற்றும் பதிலளிக்கும் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல்.

5.5 தனியார் துறை மற்றும் சுதேச மருத்துவ துறை உட்பட அனைத்து மட்டங்களிலும் சேவை வழங்கலை மேம்படுத்த ஒருங்கிணைந்த முறைகளை பின்பற்றுதல்

5.6 பொருத்தமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதை எளிதாக்குதல் மற்றும் அவற்றின் தொடர்ச்சியான இருப்பை உறுதி செய்தல்.

5.7 பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மற்றும் ஆபத்தில் உள்ள குழுக்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துவதன்மூலம் தொற்றா நோய்களிற்கான பரிசோதனை திட்டத்தின் பரவுகை மற்றும் தரத்தை மேம்படுத்துதல்

5.8 தொற்றா நோய்களுடன் வாழும் மக்களுக்கான நிறுவன மற்றும் சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு மற்றும் வலித்தடுப்பு பராமரிப்பு சேவைகள் மற்றும் வீடு சார்ந்த பராமரிப்பு ஆகியவற்றை வலுப்படுத்துதல்

5.9 உடல்நலம் நாடும் நடத்தை மற்றும் தொற்றா நோய்களிற்கான பராமரிப்பின் பயன்பாட்டை மேம்படுத்த சிவில் சமூக அமைப்புகளை ஈடுபடுத்துதல்

5.10. பேரழிவுகள் மற்றும் அவசர காலங்களில் தடையில்லா பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குவதை உறுதி செய்தல்

**மூலோபாயம் - 06 கிடைக்கக்கூடிய மனித வளங்களை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்ய பணியாளர்களை வலுப்படுத்துதல் மற்றும் திறனை மேம்படுத்துதல்.**

6.1 பயனுள்ள தொற்றா நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்காக சேவை வழங்கலின் அனைத்து நிலைகளிலும் போதுமான சுகாதாரப் பணியாளர்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.

6.2 அனைத்து சுகாதார நிலைகளிலும் விரிவான தொற்றா நோய்களிற்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்காக சரியான திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப திறன் கொண்ட திறமையான, நோக்கத்தை நிறைவேற்றப் பொருத்தமான சுகாதாரப் பணியாளர்களின் இருப்பை உறுதி செய்தல்

6.3 தொற்றா நோய்களின் பராமரிப்பிற்கான ஊக்கப்படுத்துதல் மற்றும் சுகாதாரப் பணியாளர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்காக புதுமையான முறைகளைப் பின்பற்றுதல்

**மூலோபாயம் - 07 தொற்றா நோய்களிற்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை எளிதாக்குவதற்கு சமமான மற்றும் நிலையான நிதியுதவியை உறுதி செய்தல்**

முக்கிய நடவடிக்கைகள்

7.1 தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களில் சமமான மற்றும் நிலையான நிதியளிப்பு வழிமுறைகள் மற்றும் வள ஒதுக்கீட்டிற்காக பரிந்துரை செய்தல்

7.2 ஆரம்ப சுகாதார பராமரிப்பில் தொற்றா நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கான நிதி நிலைத்தன்மையை உறுதி செய்தல்

7.3 பயனுள்ள தலையீடுகளின் மேம்பட்ட செயல்திறன் மற்றும் வினைத்திறனிற்காக, சுகாதாரத் துறையில் உள்ள தொடர்புடைய திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு வரவு செலவுத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

7.4 கொள்கை அமுலாக்கத்தை மேம்படுத்துவதற்காக பயனுள்ள கூட்டாண்மைகளை உருவாக்குவதன் மூலமான வெளிப்புற நிதியுதவி உள்ளடங்கலான மாற்று மற்றும் புதுமையான நிதியளிப்பு வழிமுறைகளை ஆராய்தல்

**மூலோபாயம் - 08 சிறந்த நிகழ்ச்சி மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர் விளைவுகளை நோக்கி தகவல் லோண்மை அமைப்புகளை வலுப்படுத்துதல்**

8.1 தேசிய, துணை தேசிய மற்றும் சேவை வழங்கல் நிலைகளில், சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சாரா துறைகளில் இருந்து தொற்றா நோய்கள் தொடர்பான ஆபத்து நடத்தைகள், நோயுற்ற தன்மை மற்றும் இறப்பு பற்றிய நிகழ்நேர, பிரிக்கப்பட்ட, தரமான தரவைப் பெற தொற்றா நோய்களிற்கான கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல்.

8.2 தேசிய, துணை தேசிய மற்றும் சேவை வழங்கல் மட்டங்களில் கண்காணிப்பு பொறிமுறை மூலம் உருவாக்கப்பட்ட சரியான நேரத்திலான ஆதாரங்களின் அடிப்படையில், முடிவெடுத்தல், மற்றும் கொள்கை பதிலிறுத்தல் போன்றவற்றுக்கான வழிமுறைகளை நிறுவுதல்

8.3 தனிப்பட்ட நிலை தொற்றா நோய்கள் தொடர்பான தரவு மற்றும் ஒருங்கிணைந்த கண்காணிப்பு உள்ளிட்ட டிஜிட்டல் தகவல் அமைப்புகளுக்கு துரிதமாக மாறுதல்.

8.4 கையிருப்பு அறிவிப்புகள், பொருட்கள் மேலாண்மை மற்றும் சேவை இருப்பை கண்காணித்தல் போன்ற சேவை வழங்கலை ஆதரிக்கும் தகவல் அமைப்புகளை வலுப்படுத்துதல்

8.5 அவ்வப்போதான ஆய்வுகள் மூலம் ஆபத்து காரணிகள் மற்றும் தொற்றா நோய்களின் போக்குகளை கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய தலையீடுகளை மதிப்பீடு செய்தல்

**மூலோபாயம் - 09 ஆதாரம் சார்ந்த நடைமுறைக்கான ஆராய்ச்சியை ஊக்குவித்தல்**


9.1 முன்னுரிமையளிக்கப்பட்ட ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்

9.2 பலப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி திறன், போதுமான நிதி மற்றும் கூட்டு ஆராய்ச்சி மூலம் தொற்றா நோய்களிற்கான ஆராய்ச்சியை மேம்படுத்துதல்

9.3 ஆராய்ச்சியை செயல்களாக மொழிபெயர்த்து, சான்று அடிப்படையிலான சுகாதார தலையீடுகள், சிறந்த பயிற்சிகள் மற்றும் புது முயற்சிகளை ஊக்குவித்தல்

**செயல்படுத்துதல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல்**

தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களுடனும் பொருத்தமான ஒருங்கிணைப்பு வழிமுறைகளை உருவாக்குவதன் மூலம் தேசிய தொற்றா நோய்கள் கொள்கை, முன்மொழியப்பட்ட மூலோபாய அணுகுமுறைகள் மற்றும் செயல் திட்டம் ஆகியவை வெற்றிகரமாக செயற்படுத்தப்படும். கொள்கை அமுலாக்கத்தின் மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுக்கான தற்போதைய வழிமுறை வலுப்படுத்தப்படும்.




படம் 04 : கொள்கை அமுலாக்கத்திற்கான நிறுவனக்கட்டமைப்பு

**தொற்றா நோய்களுக்குரிய இயக்குனரகம் (சுகாதார அமைச்சு)**

தொற்றா நோய்களிற்குரிய பிரதிப் பணிப்பாளர் நாயகமானவர் தொற்றா நோய்கள் தொடர்பான மூன்று முக்கிய தேசிய திட்டங்களான தொற்றா நோய்கள் இயக்குனரகம், உளநல இயக்குனரகம் மற்றும் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் ஆகியவற்றின் மேற்பார்வை அதிகாரி ஆவார்.

இலங்கையில் தொற்றா நோய்களுக்குரிய தடுப்பு மற்றும் கட்டுபாட்டிற்கான தேசிய மையப்புள்ளியாக சுகாதார அமைச்சிலுள்ள தொற்றா நோய்களுக்குரிய இயக்குனரகமானது தொழிற்படுகின்றது. இவ் இயக்குனரகமானது இலங்கையில் தொற்றா நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பிற்கான தேசிய கொள்கைகளை செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் நடவடிக்கைகளுக்கான மொத்தப் பொறுப்பையும் வகிக்கிறது. இயக்குனரகமானது தேவையான கொள்கை மாற்றங்கள், மூலோபாயங்களின் உருவாக்கம் மற்றும் மத்திய மற்றும் பிராந்திய மட்டத்திற்கான செயல் திட்டங்களை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கிறது மற்றும் பல்துறை ஒத்துழைப்புடன் நாடு முழுவதும் திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

**மாகாண மற்றும் மாவட்ட மட்டம்**

மாகாணங்களில் உயர் சுகாதார அதிகாரிகள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் (PDHS) மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) ஆகியோரின் தலைமையில் உள்ள தொற்றா நோய்கள் தொடர்பான சேைவகளை உள்ளடக்கிய சுகாதார சேவைகளை நிர்வகிக்கும் செயல்பாடு மாகாண சபை அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மையப்புள்ளியாக இருந்து மாவட்டங்களில் தொற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு சுகாதார சேவைகளின் பிராந்திய இயக்குனரகங்கள், நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரி - தொற்றா நோய்கள் (MO - NCD) உடன் கூடிய மாவட்ட தொற்றா நோய்கள் பிரிவுகளை உருவாக்கியுள்ளன.

இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில், மாவட்ட தொற்றா நோய்களிற்கான மருத்துவ அதிகாரி மற்றும் சுகாதார அமைச்சகத்தின் தொற்றா நோய்களிற்கான இயக்குனரகத்துடன் இணைந்த மருத்துவமனையில் தொற்றா நோய்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு ஒரு மருத்துவ அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைப்புப் பொறிமுறை**

சுகாதார மற்றம் சுகாதாரம் அல்லாத துறைகளில் தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் பொருத்தமான அனைத்து பங்குதாரர்களுடனும் பொருத்தமான ஒருங்கிணைப்பு பொறிமுறைகள் நிறுவப்படும். தொற்றா நோய்களிற்கான தேசிய வழிகாட்டுதல் குழு மற்றும் தொற்றா நோய்கள் கொள்கையை செயல்படுத்துவதில், சுகாதார அமைச்சின் இந்த மீள் திருத்தப்பட்ட கொள்கையானது, தேசிய சுகாதாரக் கொள்கை மற்றும் பிற தொடர்புடைய குறிப்பாக தாய் மற்றும் குழந்தைகள் நலம் பற்றிய தேசியக் கொள்கை, தேசிய ஊட்டச்சத்துக் கொள்கை, உலகளாவிய சுகாதார செயலாற்றலிற்கான சுகாதார சேவை வழங்கல் கொள்கை, தேசிய முதியோர் சுகாதாரக் கொள்கை மற்றும் பிற தொடர்புடைய சுகாதாரம் சாரா கொள்கைகள் போன்றவற்றுடன் பொருந்தும்படி அமைக்கப்படும்.

இலங்கையின் உளநலக் கொள்கை மற்றும் புற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய கொள்கை மற்றும் மூலோபாய கட்டமைப்பில் மனநல கோளாறுகள், நாள்பட்ட நரம்பியல் நோய்கள் மற்றும் புற்றுநோய்கள உட்பட பிற தொற்றா நோய்கள் ஆனவை முறையே குறிப்பிடப்பட்டுள்ளன. 20-38 நாள்பட்ட நரம்பியல் நோய்கள் உளநல இயக்குனரகத்தின் கீழ் கையாளப்படும்.

**தொலைநோக்கு பார்வை**

நாட்பட்ட தொற்றா நோய்களின் சுமைகளிலிருந்து விடுதலை பெற்ற நாட்டை உருவாக்குதல்

**இலக்கு**

நாட்பட்ட தொற்றா நோய்களிற்கான மற்றும் அதன் சிக்கல்களிற்கான ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள், முன்கூட்டிய கண்டறிதல் மற்றும் ஒருங்கிணைந்த மக்களை மையமாகக் கொண்ட சேவையை ஊக்குவித்து நாள்பட்ட தொற்றா நோய்களால் ஏற்படும் நோயுற்ற தன்மை, இயலாமை மற்றும் வயது முதிரா இறப்பைக் குறைத்தல்

**குறிக்கோள்கள்**

1. மக்களிடையே பொதுவான ஆபத்துக் காரணிகளின் பாதிப்பைக் குறைப்பதன் மூலம் நாட்பட்ட தொற்றாத நோய்களின் சுமையைக் குறைத்தல்

2. ஆரம்பகால கண்டறிதல், சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் வலித்தடுப்பு சிசிச்சைக்கான சேவையை மேம்படுத்த சுகாதார அமைப்பின் திறனை வலுப்படுத்துதல்.

**வழிகாட்டும் கொள்கைகள்**

1. சுகாதார உரிமைகளைப் பாதுகாத்தல் - அடையக்கூடிய மிக உயர்தரமான ஆரோக்கியத்தை அனுபவிப்பது ஒவ்வொரு தனிமனிதனதும் அடிப்படை உரிமையாகும்.

2. வாழ்க்கைப் போக்கு அணுகுமுறை - கருத்தரிப்பதற்கு முன்பிருந்து முதுமை காலம் வரையிலான வாழ்க்கைச் சக்கரத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதலிற்கான தலையிடுகளை ஒருங்கிணைத்தல்

*3. பல்துறை மற்றும் பல்பிரிவு ஈடுபாடு*

*தொற்றாத நோய்கள் மற்றும் அடிப்படை சமூக நிர்ணயங்கள் மற்றும் ஆபத்து காரணிகளை நிவர்த்தி செய்வதில் சுகாதாரத் துறைக்கு அப்பாற்பட்டு தொடர்புடைய அரசு பங்குதாரர்கள், கல்வித்துறை, அரசு சாரா நிறவனங்கள் மற்றும் சிவில் சமூகங்கள் உட்பட பல பங்குதாரர்களை பங்குகொள்ள வைத்தல்.*

*4. சான்று அடிப்படையிலான உத்திகள் -*

*இலங்கை மக்களின் ஆரோக்கியமான வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த நடைமுறைகளுக்கான சமீபத்திய சான்றுகளைப் பயன்படுத்தி பொது சுகாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் செலவு குறைந்த, நிலையான, அனைவராலும் பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் கலாசாரத்திற்குப் பொருத்தமான உத்திகளை உருவாக்குதல்*

*5. உலகளாவிய சுகாதார செயலெல்லை*

*ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவையான ஊக்குவிப்பு, தடுப்பு நடவடிக்கைகள், சிகிச்சை முறை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் பயனுள்ளதாக இருக்கும் வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தில் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன் மக்கள் பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்காத நிலையையும் உறுதி செய்தல்.*

*6. சமத்துவம் மற்றும் சமூக நிதி -*

*எந்த ஒரு தனிநபரையும் தனித்துவிட வைக்காமல் "ஒட்டுமொத்த சமூகத்தையும்" பால் நிலையை கருத்திற் கொண்டு ஈடுபடுத்துவதோடு, தொற்றா நோய்களிற்குரிய சேவை தேவைப்படுவோர் எந்த பாரபட்சமுமின்றி அவற்றை பெற வேண்டும்.*

**மூலோபாயங்கள்**

*நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தின் ஒரு சிக்கல் நிலைமையாக இருக்கும் நாட்பட்ட சிறுநீரக நோயானது (CKD) இலங்கையில் ஒரு பாரிய சுகாதார பிரச்சனையாக உருவாகியுள்ளது. சமீபத்திய மதிப்பீடுகளின்படி, 20 வயதுக்கு மேற்பட்ட மக்களிடையே பாதிப்பு 10% என மதிப்பிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில், இறுதி நிலை சிறுநீரக செயலிழப்புள்ள நோயாளிகளுக்கு டயாலிசிஸ் (சிறுநீர் பிரிப்பு) வசதிகளை மேம்படுத்துவதற்காக நாடு தனது சுகாதார வரவு செலவுத்திட்டத்தில் (மூலதனம்) 4.4% ஐ செலவிட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில், சுகாதார வரவு செலவுத்திட்டத்தில் 0.5% ஆனது (ரூபா. 1,166 மில்லியன்) இறுதி நிலை சிறுநீரகச் செயலிழப்புள்ள நோயாளிகளுக்கு டயாலிசிஸ் (சிறுநீர் பிரிப்பு) செய்ய மட்டுமே செலவிடப்பட்டது. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளை பரிசோதித்து பின்தொடர ஒரு முறையான திட்டமானது இறுதி நிலை சிறுநீரக செயலிழப்பு நிகழ்வைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*மருத்துவ தொழினுட்ப முன்னேற்றங்களாலும், சிகிச்சை முறைகளாலும் அதிக எண்ணிக்கையான மக்கள் தொற்றா நோய்களுடனும் மற்றும் அவற்றின் சிக்கல் நிலைகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். முக்கியமாக நீரிழிவு நோயுடன் தொடர்புடைய பெரும் குருதிக்குழாய் சிக்கல் நிலையின் பரவலும், நுண் குருதிக்குழாய் சிக்கல் நிலையின் பரவலும் (நரம்பு மண்டல பாதிப்பு, விழித்திரைப் பாதிப்பு மற்றும் சிறுநீரக பாதிப்பு) இலங்கையில் அதிகரித்துச் செல்வதாக திடமான ஆதாரங்கள் கூறுகின்றன. இதன் விளைவாக புனர்வாழ்வு மற்றும் வலி தடுப்பு சிகிச்சைக்குரிய சேவைகளின் தேவைகளும் அதிகரித்துச் செல்கின்றன. 2017 இல் நடத்தப்பட்ட சேவை கிடைக்கும் தன்மை மற்றும் தயார்நிலை மதிப்பீட்டின்படி (SARA-SL) இலங்கையில் 21% பொது மருத்துவமனைகளும் 53% தனியார் மருத்துவமனைகளும் மட்டுமே மதிப்பிடப்பட்ட அத்தியாவசிய மருந்துகளில் 90% த்தைக் கையிருப்பில் வைத்திருந்தன.*

*இலங்கையில் தற்போது நடைபெறும் தொற்றா நோய்களிற்கான நடவடிக்கைகளான தொற்றா நோய்களுக்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான தேசிய கொள்கை மற்றும் மூலோபாய கட்டமைப்பு மற்றும் தேசிய தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய பல்துறைசார் செயற்திட்டம் 2016-2021 மூலமாக உலகளாவிய மற்றும் பிராந்திய கண்காணிப்பு கட்டமைப்புகளுக்கு இணங்க, தொற்றா நோய்களின் மூலமான அகால மரணங்களைக் குறைப்பதற்கான இலக்கு உட்பட 10 தேசிய இலக்குகளை இலங்கை நிர்ணயித்துள்ளது. நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG) 3 க்கான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் ஆனது தொற்றா நோய்களை எதிர்த்துப் போராடுவது உட்பட ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதன் மூலம் இது ஆதரிக்கப்படுகிறது.*

*தற்போதுள்ள மற்றும் புதிய சான்று தழுவிய தலையீடுகளூடாக உலகளாவிய சுகாதார செயலாற்றலை அடையும் இலக்குடன், நோயின் மாறும் இயல்பு, நடத்தை, சூழல் மற்றும் உடலில் ஏற்படும் தொழிற்பாட்டு மாற்றங்களினால் ஏற்படும் ஆபத்துக் காரணிகளைத் தடுக்க மற்றும் கட்டுப்படுத்த வேண்டிய முயற்சிகள் பரந்த நோக்குடன் உயர்த்தப்பட வேண்டும். எதிர்காலத்தில் ஆரோக்கியத்தில் சிறந்து விளங்கும் நாடாக இலங்கை உருவாவது நாட்பட்ட தொற்றா நோய்களால் ஏற்படும் சவால்களை*

எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்கின்றது என்பதில் தங்கியுள்ளது. நாட்பட்ட தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலிற்கான மீள் திருத்தப்பட்ட தேசிய கொள்கை மற்றும் மூலோபாயக் கட்டமைப்பானது நிலையான அபிவிருத்தி இலக்கு 3 ஐ அடைவதற்கான உலகளாவிய சுகாதார செயலாற்றலிற்குத் தடையாக இருக்கும் தொற்றா நோய்களால் ஏற்படும் சுகாதார மற்றும் சமூக பொருளாதார பாதிப்பை எதிர்கொள்வதற்கு தேசிய தொற்றா நோய்களிற்கான நிரலை தேசிய நிலையான அபிவிருத்தி இலக்குடன் உள்ளடக்குவதன் மூலம் வழிகாட்டுகிறது.

**நோக்கம்** (Scope)

மீள் திருத்தப்பட்ட கொள்கையானது, தேசிய சுகாதார கொள்கை மற்றும் தேசிய தொற்றா நோய்க் கொள்கை (2010) உடன் இணைந்ததாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையானது, பிராந்திய மற்றும் உலகளாவிய இலக்குகளை அடைவதில் முன்னேற்றம் அடையும் அதே வேளையில், நாட்டில் நாள்பட்ட தொற்றா நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய பிரதிபலிப்பானது வலுவானதாக, திறமையானதாக மற்றும் பயனுள்ளதாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் எதிர்காலத்திற்கான பார்வை மற்றும் விரிவான கட்டமைப்பின் தெளிவையும் வழங்குகிறது.

இந்தக் கொள்கை ஆவணம் ஆனது, பின்வரும் நோய்களையும் அவற்றின் ஆபத்துக் காரணிகளையும் நான்கு நிலை தடுப்புகள் மூலம் நிர்வகிக்கும் அதே வேளையில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதையும் குறிப்பிடும். முதன்மை நிலை, முதல் நிலை, இரண்டாம் நிலை, கடைசி நிலை இதய நோய்கள் (இரத்தக் குழாய் சார்ந்த இதய நோய்கள் (CHD) மூளை குருதிக் குழாய் நோய்கள் (CVD) மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளடங்கலாக), நீரிழிவு நோய், நாள்பட்ட சுவாச நோய்கள் (ஆஸ்துமா, நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்) போன்றவை கவனம் செலுத்துவதற்குரிய முன்னுரிமையாக அமையும் அதே நேரத்தில், கண் கோளாறுகள், செவிப்புலன் கோளாறுகள் நாள்பட்ட ஈரல் நோய் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோய்கள் தற்போது தேசிய சவாலாக இருப்பதால், அந்நோய்களும் வரும் காலத்தில் முக்கியத்துவம் பெற வேண்டும்.

தொற்றா நோய்கள் இயக்குனரகமானது, ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புக்குப் பொறுப்பான தேசிய மையப் புள்ளியாக செயல்படும் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவு மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தொற்றா நோய்கள் பிரிவு ஆகியவை தொற்றா நோய்களுக்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான மாவட்ட பல்துறை செயல்திட்டம் மற்றும் தனிப்பட்ட தொற்றா நோய்களுக்கான செயல்திட்டத்தை தொற்றா நோய்களுக்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான மாவட்ட பல்துறை மட்ட வழிகாட்டும் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு அமைப்புகளாகச் செயல்படும்.

**தேசிய தொற்றா நோய்கள் சபை**

தொற்றா நோய்களுக்கான தேசிய சபையானது, சுகாதார அமைச்சரால் தலைமை வகிக்கப்பட்டு இலங்கையில் நாள்பட்ட தொற்றாநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளுக்கு கொள்கை அளவிலான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்கும். இச் சபையானது, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடுவதோடு உள்ளூர் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உட்பட அனைத்து தொடர்புடைய அரசு நிறுவனங்கள் மற்றும் மேம்பாட்டு பங்காளிகளின் உயர்மட்ட பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளது.

**தேசிய தொற்றா நோய்கள் சபையின் முக்கிய செயற்பாடானது :**

- நாள்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவைப்படும் அமைச்சகங்களுக்கு இடையேயான, துறைகளுக்கிடையேயான ஒத்துழைப்புகள் மற்றும் பல துறை கூட்டாண்மைகளை ஊக்குவிக்கும் உச்ச அமைப்பாகச் செயல்படுதல் ;

- சுகாதார அமைப்பின் அபிவிருத்தியின் ஒரு அங்கமாக இலங்கையில் தொற்றா நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய தொற்றா நோய்கள் கொள்கை மற்றும் பல்துறை செயற்திட்டத்தின் அமுலாக்கத்தின் முன்னேற்றத்தை மேற்பார்வையிடுதல் ;

- தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான பல்துறை செயல்திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக தேசிய தொற்றா நோய்கள் வழிகாட்டுதல் குழுவால் எடுக்கப்பட்ட முடிவுகளை மதிப்பாய்வு செய்து வழிகாட்டுதல்.

**தேசிய தொற்றா நோய் வழிகாட்டும் குழு**

தேசிய தொற்றா நோய்கள் கொள்கையை செயல்படுத்துவதில் தேசிய கண்காணிப்பு அமைப்பாக தேசிய தொற்றா நோய்கள் வழிகாட்டுதல் குழு செயல்படுகிறது. இதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் தலைமை தாங்குகிறார். உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து தொடர்புடைய அரசு முகவர் மற்றும் மேம்பாட்டு பங்காளிகளின் உயர்மட்ட பிரதிநிதித்துவத்தை இது கொண்டுள்ளது.

**இதன் உறுப்பினர்களாக :**

- நிதி, வர்த்தகம், விவசாயம், நகர திட்டமிடல், கல்வி, இளைஞர் மற்றும் விளையாட்டு, போக்குவரத்து, சுற்றாடல், தொழில், பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, நீதி, சமூக நலன் மற்றும் பிற தொடர்புடைய அமைச்சுக்களின் செயலாளர்கள்.
- சுகாதார அமைச்சின் மாகாண செயலாளர்கள், மாகாண சுகாதார பணிப்பாளர்கள், சுகாதார அமைச்சின் தொடர்புடைய சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் தொழில்முறை அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோர் உள்ளனர்.

தேசிய தொற்றா நோய்கள் வழிகாட்டுதல் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுவதோடு குறிப்பு விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள விளைவுகளை அடைவதற்கு சுகாதார அமைச்சருக்கு பொறுப்புக்கூற வேண்டும். அவையாவன :

- தொற்றா நோய்களுக்கான சமூக காரணிகளுக்குரிய தீர்வாக முக்கிய ஆதார அடிப்படையிலான தொற்றா நோய்களுக்கான மூலோபாயங்கள் மற்றும் தேசிய கொள்கைகள், திட்டமிடல் நிகழ்ச்சி நிரல் மற்றும் தொடர்புடைய அனைத்து அரச மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உள்ளடங்கலாக அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களில் தேவைப்படும் இடையீடுகளை ஏற்படுத்துதல் ;
- நன்கு வரையறுக்கப்பட்ட மற்றும் வளப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் மூலம் தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான பலடதுறைகளின் பங்களிப்பைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுவதற்கான தேசிய அமைப்பாகச் செயற்படுதல் ;
- சிவில் சமூக அமைப்புகள் உட்பட அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில், சுகாதாரம் மற்றும் சுகாதாரம் அல்லாத துறைகளில் ஒருங்கிணைந்த பல துறை முயற்சிகளை வலுப்படுத்துதல்.

பல துறைகளை உள்ளடக்கிய மூலோபாயங்களை செயல்படுத்துவது தொடர்பாக தொற்றா நோய்களுக்கான தேசிய வழிகாட்டுதல் குழுவால் எடுக்கப்பட்ட முடிவுகள் தொற்றா நோய்கள் சபையில் விவாதிக்கப்படும்.

**தொற்றா நோய்களுக்குரிய தேசிய ஆலோசனைக் குழு**

தொற்றா நோய்களுக்குரிய தேசிய ஆலோசனைக் குழுவானது, தேசிய தொற்றா நோய்கள் கொள்கையை செயல்படுத்துவதற்கான ஆலோசனை அமைப்பாக செயற்படுவதோடு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது. இதன் தலைவராக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விளங்குவார். அத்துடன் சுகாதார அமைச்சின் இயக்குனரகங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்முறை அமைப்புகளின் உயர்மட்ட தொழில்நுட்ப பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளது. அதன் முக்கிய செயல்பாடுகள் தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குதல் மற்றும் தொற்றா நோய்கள் கொள்கையின் செயற்படுத்துகையை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்தல் ஆகும்.

**மாவட்டத் தொற்றா நோய் பல்துறைசார் வழிகாட்டும் குழு**

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) மற்றும் ஒவ்வொரு சுகாதார மாவட்டத்திலும் உள்ள மாவட்டச் செயலாளர் ஆகியோர் இணைந்து தலைமை தாங்கும் மாவட்டத் தொற்றா நோய் பல்துறைசார் வழிகாட்டும் குழுவானது, ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் கவனம் செலுத்த வேண்டிய முன்னுரிமைப் பகுதிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி சுகாதாரம் சாரா பங்குதாரர்களுக்கு பரிந்துரைக்கும் தளமாகச் செயல்படுகின்றது.

**குழுவின் பணிகள் :**

- தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் பல்துறைகளின் ஈடுபாட்டை வலுப்படுத்துதல் ;
- சுகாதார மேம்பாடு மற்றும் தொற்றா நோய்களுக்கான அபாயத்தைக் குறைப்பதற்கான "தளம்சார் அணுகுமுறையைச் செயல்படுத்துதல் ;
- தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்குமான மாவட்ட அளவிலான பல்துறை செயல்பாடுகளை செயல்படுத்துவதைக் கண்காணித்து மதிப்பீடு செய்தல் ;

குழுவின் உறுப்பினர்கள், தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் மாவட்டப் பல்துறை செயல்திட்டம், அவர்களின் தனிப்பட்ட பங்கு மற்றும் பொறுப்புகள், காலக்கெடு மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை ஒப்புக்கொள்கிறார்கள். இதைத் தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களின் பங்கேற்புடன் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**சேவை வழங்குதல் :**

தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான சேவைகளானவை (கண்டறிதல், நோய் நிர்ணயம், கண்டறிதல், சிகிச்சை, புனர்வாழ்வு மற்றும் இறுதி நிலை கவனிப்பு உள்ளடங்கலாக), தற்போதுள்ள தடுப்பு மற்றும் சிகிச்சையளிக்கும் அமைப்புக்கள் மூலம் வழங்கப்படும் பிராந்திய அளவில், பிராந்திய சமுதாய வைத்திய நிபுணர்களின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின் கீழ் வைத்திய அதிகாரி, தொற்றா நோய்களும் மற்றும் தேசிய அளவில் தொற்றா நோய்களுக்கான இயக்குனரகமும் இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பானவர்களாவர். தொற்றா நோய்களின் செயல்பாடுகள் ஆனவை, வாழ்க்கை மட்ட அணுகுமுறையின் ஊடான சேவை வழங்கலை ஆதரிக்க தற்போதுள்ள தொடர்புடைய திட்டங்களுடன் அனைத்து மட்டங்களிலும் ஒருங்கிணைக்கப்படும். தற்போதுள்ள சுகாதாரப் பணியாளர்கள், தொற்றா நோய்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக மாற்றியமைக்கப்படுவர். குடிமக்கள் ஈடுபாடு மற்றும் பொருத்தமான தகவல் தொடர்பு மூலம் களமட்டத்தில் செயல்படுத்துதல் மேலும் ஆதரிக்கப்படும். அனைத்து மட்டங்களிலும் மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையிலும் மயான பராமரிப்பு தொடர்ச்சியை ஆதரிக்க ஒருங்கிணைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இலங்கையானது, சுகாதார வைத்திய அதிகாரி (MOH) மூலம் வழங்கப்படும் வலுவான வருமுன் காக்கும் சுகாதார அமைப்பைக் கொண்டுள்ளது. இது தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திலும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதிலும் நல்ல விளைவுகளைச் செயல்படுத்தியுள்ளது. தற்போதுள்ள MOH அமைப்பானது, தொற்றா நோய்களுக்கான சுகாதார மேம்பாடு மற்றும் ஆபத்துக் காரணி குறைப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கும். இச்செயற்பாடுகள் சமூக மட்டத்தில் கள மட்ட பொது சுகாதார பணியாளர்களான குடும்பநல உத்தியோகத்தர் (PHM), பொதுச்சுகாதார பரிசோதகர் (PHI), சுகாதார மேம்பாட்டு உத்தியோகத்தர் (HPO) போன்றவர்களால் மற்ற அரசாங்க கள ஊழியர்கள் (பிரதேச செயலாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளவர்கள்) சமூகத் தலைவர்கள் மற்றும் தாய்மார் ஆதரவு குழுக்கள், முதியோர் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும்.

சுகாதார அமைச்சின் 2018 ஆம் ஆண்டின் “உலகளாவிய சுகாதாரப் பரவுகைக்கான சுகாதார சேவை விநியோகக் கொள்கையை” அடிப்படையாகக் கொண்டு, சுகாதார சேவைகள் ஆனவை பகிரப்பட்ட பராமரிப்புக் குழுக்களாக மறுசீரமைக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவும் (cluster) ஒரு தலைமை வைத்தியசாலை (ஆதார வைத்தியசாலை அல்லது உயர்நிலை சிகிச்சைப் பராமரிப்பு நிறுவனம்) மற்றும் அதைச் சுற்றியுள்ள, முதன்மை மருத்துவப் பராமரிப்புப் பிரிவுகள் மற்றும் பிரதேச மருத்துவமனைகள் போன்ற ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிறுவனங்களைக் (PMCI) கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிறுவனமும் அதற்கென தனியான வரையறுக்கப்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. தலைமை மருத்துவமனையின் ஒதுக்கப்பட்ட மக்கள் தொகையானது, அதைச் சுற்றியுள்ள ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிறுவனங்களின் வரையறுக்கப்பட்ட மக்கள் தொகையின் கூட்டாக உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, நோய் சிகிச்சையளிக்கும் துறையிலுள்ள தொற்றா நோய்களுக்கான சேவைகள் ஆனவை, பலப்படுத்தப்பட்ட முதன்மை பராமரிப்பு சேவைகளுடன் கூடிய இந்த மாதிரியின் மூலம் அத்தியாவசியமான முதல் நிலை தொடர்பு சிகிச்சையை வழங்குவதற்காகப் பயன்படும். இது சிறப்புப் பராமரிப்புச் சேவைகளின் சமமான வலையமைப்பு மூலம் ஆதரிக்கப்படும். இந்தச் சீர்திருத்தமானது, பராமரிப்பின் தொடர்ச்சி, நிதி இடர் பாதுகாப்பு மற்றும் நோயாளிகளின் பிதிபலிக்கின்ற சேவை போன்றவற்றை ஆதரிக்கிறது. புனர்வாழ்வு மற்றும் “ சேவைகள் உள்ளடங்கலான தொற்றா நோய் உள்ள நோயாளிகளுக்கான வீட்டுப் பராமரிப்பானது சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ், பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள் (PHNO) மற்றும் சமூகத்தின் தன்னார்வலர்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

**கண்காணித்தலும் மதிப்பிடலும்**

முடிவுகள் கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பின் ஊடான தேசிய தொற்றா நோய்கள் திட்டத்தின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மூலம் அனைத்து பங்குதாரர்களும் தேசிய இலக்குகளுடன் இணைந்திருப்பதை உறுதி செய்வதன் மூலம் இலக்குகளை அடைவதற்கு தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் பொறுப்பாளி ஆவார். தேசிய தொற்றா நோய்கள் கொள்கை மற்றும் மூலோபாயக் கட்டமைப்பின் அமுலாக்கம் போன்றவை முடிவுகள் அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பு மூலம் கண்காணிக்கப்படும். தேசிய தொற்றா நோய்களுக்கான வழிகாட்டுதல் குழு மற்றும் தேசிய தொற்றா நோய்கள் சபைக்கு பரிந்துரைகள் அனுப்பப்படும் முடிவுகளின் கட்டமைப்பை ஆதரிக்க அவ்வப்போது உள்ளக மற்றும் வெளியக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

EOG 09-0070

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.